ஜனத்தொகை ஐந்து ஆயிரத்துக்கு மேல் போகக் கூடாது என்ற ஒரு தடை இருக்கிறது. அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியானுல் அதற்குரிய காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தத் திட்டம் தான் இப்போது அடியோடு போய்விட்டதே.

SRI M. KALYANASUNDARAM : மிக வேகமாக அபிவிருத்தி அடைந்து வருகிற நகரங்களின் குடிதண்ணீர் பிரச்னையைக் கருத்தில் கொண்டு இதை மறு பரிசீலனை செய்து திருத்தி அமைப்பதற்கு ஒரு விசாரணைக் கமிட்டியை நியமிக்க ஆலோசனை செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதில் விசாரணைக் கமிட்டி ஏற்படுத்துவது அல்ல பிரச்னை. நமக்கு வேண்டியது முக்கியமாகப் பணம். அதை வைத்துக் கொண்டு திட்டத்தை ஒழுங்கு செய்ய வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே குடிதண்ணீர் திட்டங்களுக்காக நமக்கு 407 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. நாம் 593 லட்சத்திற்குச் செலவு செய்திருக்கிறோம்.

High Schools

* 1849 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர்
9-30 a.m. தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள எல்லா உயர்தர பாடசாலைகளையும் சர்க்காரே எடுத்து நடத்த உத்தேசமுண்டா ?

(இ) எப்போதிலிருந்து ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்காரே எடுத்து நடத்தவில்லையென்று சொன்ன போதிலும் சர்க்கார் நடத்தக்கூடியது, ஸ்தலஸ்தாபனங்கள் நடத்தக் கூடியது, தனியார் துறையில் நடத்தக்கூடியது போன்ற உயர்தர பாடசாலைகளை எல்லாம் எந்த முறையில் நடத்துவதாக உத்தேசம் ? என்பதைப்பற்றி விவரமாக அறிவிக்க முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் எடுத்து நடத்தும் உத்தேசம்உண்டா என்று கேட்கப்பட்டிருக்கிறது, இல்லை என்று சொன்னேன். அடுத்தபடி செகன்டரி எஜுகேஷனைப் பற்றி—பாலிஸி பற்றி கேட்கிறார்கள். பாலிஸி பற்றி கேள்வி நேரத்தில் விடை மூலம் சொல்ல முடியாது.

Government Headquarters Hospital, Vellore

* 1850 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் ஜில்லா தலைமை சர்க்கார் ஆஸ்பத்திரியில் போதிய டாக்டர்களும், நர்சுகளும், சிப்பந்திகளும், மருந்தும் இல்லை என்று நோயாளிகள் முறையிடுவது உண்மையா ?

(இ) அப்படியானுல், இக்குறைகளைப் போக்க சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No such complaint has been received from any of the patients in the hospital.

(*b*) Does not arise.

DEPUTY SPEAKER : Questions are over.